# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை - ஜூலை 2016

## (AA31) FINANCIAL ACCOUNTING AND REPORTING

நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

---

அனேக பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சித்தியடைய தவறிய பரீட்சார்த்திகள் எதிர்வரும் பரீட்சைகளில் சித்தியடைய இவ்வாறான தவறுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும்

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

***நோக்கம்:*** *இந்த வினாவில் பொருட்கள் விற்பனையிலிருந்து வருமான ஏற்பிசைவும் அளவீடும் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.*

(1) பகுதி (a): அனேக பரீட்சார்த்திகள் 75 அலகுகளின் வருமானத்தை சரியாக அடையாளம் கண்டு முழுப்புள்ளிகளை பெற்றனர். ஏனையோர் ரூபா 50,000/- இனை வருமானமாக குறிப்பிட்டிருந்தனர்.

(2) பகுதி (b): இந்தப் பகுதிக்கு திருப்திகரமாக பதிலளிக்கவில்லை. அனேக பரீட்சார்த்திகள் 7 மாத வருமானத்தினை ஏற்பிசைவு செய்வதற்குப் பதிலாக ரூபா 10,000/- இனை அல்லது ரூபா 12,000/- இனை ஏற்பிசைவு செய்திருந்தனர்.

(3) அனேக மாணவர்கள் வருமான ஏற்பிசைவு பற்றி சிறந்த அறிவினை கொண்டிருக்காமை தெரியவந்துள்ளது. அடிப்படை வருமான ஏற்பிசைவுத் தத்துவங்களை கற்றுக்கொள்ள மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்

### வினா இல. 02

***நோக்கம்:*** *இந்த வினாவில் தொடர்ந்தியங்கும் தாபன எடுகோளின் வரைவிலக்கணம் மற்றும் பயனுள்ள நிதித் தகவல்களின் தரரீதியான அம்சங்கள் பரீட்சிக்கப்பட்டது.*

(1) அனேகமான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு நன்கு விடையளித்து முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனர்.

(2) ஆனால் வினாவில் இரண்டு தரரீதியான அம்சங்களை கூறுமாறு கேட்கப்பட்டபோதிலும், விடை தெரியாத சிலர் தரரீதியான அம்சங்களை விரிவாக விபரித்துள்ளனர்.

### வினா இல. 03

***நோக்கம்:*** *குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மை பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.*

(1) பரீட்சார்த்திகளின் விடைகள் மிகவும் திருப்தியற்றதாக இருந்தது. அனேகமானோர் ஒரு குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மையின் பெயரையேனும் தெரிந்திருக்கவில்லை.

(2) பரீட்சைக்கு தயாராகும் பரீட்சார்த்திகள் AAT பிரசுரித்துள்ள கற்கை நூல்களை நன்கு வாசிக்க வேண்டும்.

## வினா இல. 04

***நோக்கம்:*** தேய்மானம் மற்றும் முன்கொணரற் பெறுமதியை கணிப்பதற்கான பரீட்சார்த்திகளின் இயலுமை பரீட்சிக்கப்பட்டது.

(1) இது ஒரு நேரடியான வினாவாக இருந்தபோதிலும், தேய்மானத்தை கணிப்பதில் பல பரீட்சார்த்திகள் தவறுவிட்டுள்ளனர். இதற்குக் காரணம் மீளாய்வின் பின எந்திரத்தினை மேலும் 3 ஆண்டுகள் பயன்படுத்த முடியும் மற்றும் மூன்றாம் ஆண்டு முடிவில் எந்திர ஒழிவுப்பெறுமதி ஆகிய தகவல்களை அவர்கள் கவனத்திற் கொள்ளத் தவறியமையாகும்.

(2) அனேக பரீட்சார்த்திகள் வினாவிற் தரப்பட்ட தகவல்கள் எல்லாவற்றையும் கவனத்திற் கொள்ளாது, ரூபா 4 மில்லியனை 5 ஆண்டினால் பிரித்து தேய்மானம் ரூபா 800,000/- எனக் காட்டியுள்ளனர்.

## <u>பகுதி B</u>

## வினா இல. 05

***நோக்கம்:*** *பகுதி (a): 2007 ஆண்டு 7 அம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் இசைவு பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.*
*பகுதி (b):* GP மற்றும் ROCE வீதங்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் வினவப்பட்டது.

(1) பகுதி (a) க்கு ஒதுக்கப்பட்ட 6 புள்ளிகளில் அனேகர் 4 புள்ளிகளை பெற்றுள்ளனர்.

(2) இங்கு அனேகமானோர் வருமானவரி செலுத்தவேண்டியது *2007 ஆண்டு 7 அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்* தேவைப்பாடு என குறிப்பிட்டுள்ளனர்.

(3) பகுதி (b) க்கு அனேகமானோர் நன்கு விடையளித்துள்ளனர்.

## வினா இல. 06

***நோக்கம்:*** *பகுதி (a):* நிதிக்கூற்றுக்களில் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் மற்றும், முன்னுரிமைப் பங்கிலாபத்தின் முன்னிலைப்படுத்தல் பற்றி வினவப்பட்டது.
*பகுதி (b):* நிதிச் சொத்துக்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.

(1) அனேகமான பரீட்சார்த்திகள் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளை நீண்டகால பரிப்பின் கீழும், முன்னுரிமைப் பங்கிலாபத்தை நிதிச் செலவாகவும் காட்டவேண்டுமென குறிப்பிட்டுள்ளனர்.

(2) அனேகமானோர் நிதிச் சொத்துக்களை சரியாக இனங்கண்டனர். ஏனையோர், தொக்கு மற்றும் முற்கொடுப்பனவுகளையும் நிதிச்சொத்துக்களாக இனங்கட்டுள்ளனர்.

(3) எனினும், ஒவ்வொரு சொத்தினதும் வகைப்படுத்தலுக்கான காரணங்கயும் வினாவில் கேட்கப்பட்டிருந்த போதிலும், அனேகமானோர் அதற்கு விடையளிக்கவில்லை.

## வினா இல. 07

***நோக்கம்:*** *கீழ்வருவன பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது:*

*(1) பகுதி (a): ஒன்றித்தல் மீதான நன்மதிப்புக் கணிப்பீடு.*

(2) *பகுதி (b): கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக் கணக்கு மீதி.*

(3) *பகுதி (c) ஒன்றித்த கைக்கொள் இலாபக் கணக்கு மீதி.*

(4) *பகுதி (d) 31.03 2016 திகதி ஒன்றித்த நிதிநிலைக் கூற்றில் காட்டவேண்டிய ஆதனம், பொறி மற்றும் உபகரண தொகை.*

பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து கீழ்வருவன அவதானிக்கப்பட்டது::

பகுதி (a)

அனேக பரீட்சார்த்திகள் சுவீகரிப்புத் திகதியில் கட்டுப்பாடற்றோர் பாத்தியதைச் சீர்மதிப்பினை கணிக்கமுடியாது இருந்ததுடன், ஒன்றித்தல் மீதான நன்மதிப்பை கணித்தலில் இந்த சீர்மதிப்பு செம்அனேகமான பரீட்சார்த்திகள் மையாக்கத்தை கணக்கிற் கொள்ளவில்லை.

பகுதி (b) & (c)

குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகளால் மாத்திரம் கட்டுப்பாடற்றோர் பாத்தியதையின் சுவீகரிப்புக்கு பிந்திய இலாபப் பங்கினை சரியாக இனங்காண முடிந்தது. அனேகமானோருக்கு சுவீகரிப்பிற்கு முந்திய மற்றும் பிந்திய இலாபங்களை சரியாக வேறுபடுத்த முடியவில்லை.

பகுதி (d)

அனேகமான பரீட்சார்த்திகள் **Pero PLC** மற்றும் **Sara Ltd** ஆகியவற்றின் சொத்துக்களை கூட்டிப் போட்டிருந்தபோதிலும், காணி தொடர்புபட்ட செம்மையாக்கத்தினை செய்யத் தவறியுள்ளனர்.

## பகுதி C

## வினா இல. 08

***நோக்கம்:*** *கீழ்வருவன பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது:*

(1) *பகுதி (a) முற்றடக்க வருமானக் கூற்றினை தயாரித்தல்.*

(2) *பகுதி (b) நிதிநிலைக் கூற்றினைத் தயாரித்தல்.*

(3) *பகுதி (c) உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றினை தயாரித்தல்.*

(4) *பகுதி (d) LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் PPE க்கான குறிப்புப் பற்றிய அறிவு*

பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து கீழ்வரும் தவறுகள் அவதானிக்கப்பட்டன:

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(1) அனேக மாணவர் தேய்மான கணிப்புப் பற்றி போதிய அறிவினை கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, ஆண்டின்போது சேர்ப்பனவு மீதான தேய்மானம், விற்பனை செய்யப்பட்ட சொத்துத் தொடர்பான செம்மையாக்கம் (இங்கு ஆறு மாத காலத்திற்கான தேய்மானம் கணக்கிற் கொள்ளப்படவில்லை). சில பரீட்சார்த்திகள் முற்றாக தேய்மானம் செய்யப்பட்ட தளபாடப் பெறுமதி ரூபா 400,000/- மீதும் தேய்மானம் கணித்துள்ளனர். சில மாணவர் இந்த ரூபா 400,000/- இனை விற்பனைப் பெறுவனவாக எடுத்துள்ளனர்.

(2) சில பரீட்சார்த்திகள் 20.03.2016 இல் விற்ற வினியோக வானின் தேய்மானத்தை சரியாக கணித்திருக்கவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் காணியின் பெறுமதியை ரூபா 2,000/- க்கு பதிலாக ரூபா 18,000/- இனால் கூட்டியிருந்தனர்.

முதலீடுகள்

சில பரீட்சார்த்திகள் 31.03.2016 இல் முதலீட்டினை சீர்மதிப்பில் காட்டவில்லை.

வியாபார வருமதிகள்

சில பரீட்சார்த்திகள் 31.03.2016 திகதியில் வியாபார வருமதிகள் மீதியை கணித்தலில் தவறு விட்டுள்ளனர். பதிவழிக்கப்பட்ட கடன் செம்மையாக்க தவறுகள் வருட இறுதியில் பிழையான வியாபார வருமதியாளர் கணக்கு மீதிக்கு வழிவகுத்ததுடன், அதன் காரணமாக ஐயுறவுக்கடன் ஏற்பாட்டிலும் பிழை ஏற்பட்டள்ளது.

வரிச் செலவு

கணிசமான எண்ணிக்கை மாணவர்கள் ஆண்டின் வரிச் செலவினை சரியாக காட்டவில்லை. அவர்கள் முன்னைய ஆண்டிற்கான குறை ஏற்பாடு ரூபா 500,000/- இனை உட்படுத்தாது ரூபா 5,100,000/- இனை மாத்திரம் காட்டியிருந்தனர்.

கணிசமான எண்ணிக்கை மாணவர்கள் 31.03.2016 இல் வருமான வரிப் பரிப்பினை சரியாகக் கணிக்க தவறினர்.

உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று

சில பரீட்சார்த்திகள் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபத்தை கைக்கொள் இலாபத்திற்குப் பதிலாக பங்கு மூலதனத்திலிருந்து கழித்துக் காட்டியுள்ளனர்.

இன்னும் சில பரீட்சார்த்திகள் மீள்மதிப்பீட்டுச் செம்மையாக்கத்தை மீள்மதிப்பு ஒதுக்க நிரலில் காட்டுவதற்குப் பதிலாக கைக்கொள் இலாப நிரலில் காட்டியிருந்தனர்.

பொதுவான கருத்து

கணிசமான எண்ணிக்கை மாணவர்கள் தமது கணிப்பீடுகள் செயன்முறைகளை விடைத்தாளில் உட்படுத்தாத காரணத்தால், அத்தகைய விடைகளுக்கு புள்ளிகள் வழங்கமுடியாமற் போனது.

**ஒட்டுமொத்தப் பெறுபேறு**

கிட்டத்தட்ட எல்லா பரீட்சார்த்திகளும் இந்த வினாவுக்கு விடையளித்ததுடன், அனேகமானோர் 15 புள்ளிகளுக்கு அதிகமாக பெற்றிருந்தனர்.

மாணவர்களின் பெறுபேறு திருப்திகரமாக இருந்தது.

பெறுபேற்றை மேம்படுத்த அதிகளவு வினாக்களை பயிற்சி செய்வதுடன், கால முகாமையை கவனத்திற் கொள்ளவும்.

## வினா இல. 09

***நோக்கம்:*** *இந்த வினாவில் நேரில் முறையில் காசுப் பாய்வுக் கூற்றினை தயாரித்தல் மற்றும் விகிதங்களின் கணிப்பீடு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.*

**அவதானித்தவை:**

பகுதி (a)

காசுப்பாய்வுக் கூற்றை தயாரித்தலில் சில பரீட்சார்த்திகள் கீழுள்ள தவறுகளை விட்டிருந்தனர்.

(1) விற்பனை மீதான நட்டத்தை தவறாகக் கணித்தல்.

(2) விற்பனை மீதான நட்டத்தை வரிக்கு முன் இலாபத்திலிருந்து கழித்தல்.

(3) தொழிற்படு மூலதன மாற்றங்களை தவறாகக் கையாளல்.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரண கொள்வனவுக் கிரயத்தை கணித்தலில் தவறுகள்.

(5) செய்முறைகளில் விற்பனைப் பெறுவனவினை கணித்த பின்னரும், அதனை காசுப்பாய்வுக் கூற்றில் காட்டாதது.

(6) ஆரம்ப மற்றும் இறுதிக் காசுச் சமானங்களை காட்டாதது.

(7) காசுச் சமானங்களில் வங்கி மேலதிகப் பற்றினை உட்படுத்தாதது.

<u>பகுதி (b)</u>

விகிதங்களை கணித்தலில் சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் தவறுகளை விட்டனர்:

(1) தொக்குப் புரள்வு விகிதத்தினை கணித்தலில் சில பரீட்சார்த்திகள் பகுதி எண் மற்றும் தொகுதி எண்களை இடம்மாறி எழுதியிருந்தனர்.

(2) விரைவுச் சொத்து விகிதத்தினை கணித்தலில் நடைமுறைச் சொத்துக்களிலிருந்து தொக்கு மற்றும் முற்கொடுப்பனவுகள் இரண்டையும் கழித்திருந்தனர்.

(3) பொதுவாக இந்தப் பகுதி இலேசானது. அனேக பரீட்சார்த்திகள் 90% க்கும் அதிகமான புள்ளிகளை இந்தப் பகுதியில் பெற்றுள்ளனர்.

(4) இருப்பினும் சில பரீட்சார்த்திகளால் மொத்த இலாப வீதம், நிகர இலாப வீதம், நடப்பு வீதம் போன்ற மிகவும் இலேசான விகிதங்களைக்கூட கணிக்க முடியவில்லை.

- * * * -